# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.
## C.C. No.10/2025 DW.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சாமிநாதன் | த–பெ | பழனிப்பன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம் | |
| வயது: | : | 46/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வியாபாரம் | மாவட்டம் | |

**Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2026**

----------------------------------------------------------------------------------------------------

**03.07.2026**

**<u>முதல் விசாரணை:</u>**

1) நான் கலைமணி நகர் 6 வது வீதியில் வசித்து வருகிறேன். புகார்தாரரை எனக்கு யார் என்றே எனக்கு தெரியாது. தற்போதைய வழக்கில் ஆஜரான பின்புதான் பார்த்துள்ளேன். நான் புகார்தாரரிடம் இருந்து எந்த ஒரு பணமும் வாங்கவில்லை. எனக்கும் மாத்தூரில் உள்ள பாலாஜிக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் இருந்தது. அவருக்கு தரவேண்டிய தொகை அனைத்தையும் கொடுத்துவிட்டேன். 2024 ல் பாலாஜி என்னை கடத்தி எனது கார், 2 இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டார், அப்போது என்னை மிரட்டி எனது 8 கரூர் வைஸ்யா வங்கி காசோலைகளை கையொப்பம் மட்டும் செய்து நிரப்பாமல் பெற்றுக்கொண்டார். அதற்காக நான் சாக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எதிரிகள் arrest ஆகி 4 நபர்கள் remand செய்யப்பட்டார்கள். **(கு.எண். 233/2024 முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது. )** என்னிடம் இருந்து திருடி சென்ற T.V. Fridge மற்றும் எனது வாகனங்கள் கைப்பற்றப்பட்ட நீதிமன்றத்தில் வைப்பில் உள்ளது. 8 காசோலைகளில் 2 காசோலைகள் பாலாஜி அவரது

மச்சினனை வைத்து என் மீது தேவகோட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அதன் விசாரணையில் பொய் வழக்கு என்று தீர்மானிக்கப்பட்டது. மாத்தூர் முருகன் என்பவர் மூலமாக அழகப்பா காவல் நிலையத்தில் காசோலையை தவறாக பயன்படுத்தி என் மீது புகார் கொடுத்துள்ளார். அதன் விசாரணையில் பொய் வழக்கு என்று தீர்மானிக்கப்பட்டது. அதில் இரண்டு காசோலைகளை தற்போதைய புகார்தாரருக்கு கொடுத்து அதில் ஒரு காசோலையை வைத்து தற்போதைய வழக்கு புகார்தாரர் என் மீது பொய்யாக தாக்கல் செய்துள்ளார். ரூ.5,00,000/- கொடுப்பதற்கு புகார்தாரருக்கு எப்போதும் வசதி இருந்தது இல்லை. காசோலை தொகை கொடுக்க நான் சட்டப்படி கடமைப்பட்டவர் இல்லை. பொய் வழக்குகாகும்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.07.03 03:23:13 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
காரைக்குடி.